ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

ஸர்வஜனங்களும் தங்கள் இஷ்டத்தைச்சாதித்துக்கொள்ள எவ்வளவோ உபாயங்களை உத்தேசிக்கின்றூர்கள். அவற்றுள்ளொன்றினாலேனும் உத்தேசித்தபடி குறிப்பிட்டகாலத்தில் பலனைக்கண்டதாகக்காணேம். நம் மூத்தோர்நாளிலும் ஸாதனங்கள் கூறப்படாமலில்லை. அவைகளைத் தற்காலத்தியமேதாவிகள் கெவனிக்கவில்லையென்பது மாத்திரமில்லை. அவைகளழியவும் வழிதேடிவருகிறூர்கள். ஆனல் அவைமுற்றிலும் தப்பென்றே தீர்மானித்துவிட்டதாகவும்தெரியவில்லை. பணத்தையேபெரிதாகநினைத்து அதுகிடைக்கவேனுமென்று வேண்டிக்கொண்டு கண்கண்டகோவில்களில் கையெடுத்துக்கும்பிடாதஇடமில்லை. விநாயகாதிதேவதைகளின் ஸ்தோத்திர பாடபுஸ்தங்களை வாங்காமலில்லை. அந்தப்பாடல்களை ஸன்னிதிகளிற் சொல்லாமலுமில்லை. அப்படியிருந்தும் அவைகளிற்கூறப்படும் ஸநாதனதர்மிகளின் பெருமையைப்பார்க்க அவர்கன்மனம் ஸஹிக்கவுமில்லை. இவ்விஷயத்தை நம்பண்டிதமணிகள் தெரிந்துகொள்ளாமலுமில்லை. அப்படியிருந்தும் அவர்கள்மௌனம்ஸாதிப்பது நம்மவர் பாக்கியக்குறைவாலாமென்பதிற்கையமில்லை. இவ்விதம் எல்லோருமே கலிமஹாராஜன்பக்ஷத்தில்சேர்ந்தால் பரமேசுவரகிருபையைப் பரிபூர்ணமாய்ப்பெற்ற நமதுஸநாதனமதம் எப்படித்தான் விருத்தியடையும். இம்மாதிரி விண்ணப்பம்பன்முறைபண்டிதர்கள் முன்னிலையில் கொண்டுவரப்பட்டும் பயன்படவில்லை என்று ஸநாதனதர்மிகள் வருத்தமடையஇடமில்லை. "பெரியோர்களிடத்து வேண்டுகோள் பலிக்காவிடினும் குற்றமில்லை. அதமனிடத்துவேண்டுகோள் பலித்தும் பிரயோஜனமில்லை" என்று மஹாகவி காளிதாஸர் சொன்னதை நினைத்துக்கொண்டு மீண்டும்பிரார்த்திக்க முன்வருவார்கள். இவ்விஷயத்தில் ஓர்ஸநாதனதர்மி, சிலபண்டிதர்களிடம் வேண்டிக்கொண்டதை இங்குவெளியிடவேண்டியதவசியமாகிறது— "வேதங்களில் சிரத்தையுள்ளவர்போல் அபிநயித்துக்கன்மங்களிற் சிலவற்றை யனுஷ்டிக்குமந்தணர்காள்! எமதுவிண்ணப்பத்திற்குச்சிறிது செவிசாயுங்கள். பெரியோர்களே! எம்மிடம் தங்களுக்குச்சிறிது கோபாவேசமிருப்பினும், அவ்வளவு கோபம் வேதங்களிலும், தர்மசாஸ்திரங்களிலும், புராணங்களிலுமிருக்க நியாயமில்லை. ஆர்யர்காள்! ஆலோசியுங்கள். இச்சமயம் நம்மதத்திற்கு மஹத்தான பீடையன்றே உண்டாய்விட்டது: சிறிதுசிறிதுகாலம் சென்றால் அடியோடழியுமே. அப்பொழுது என்னசெய்யமுடியும்? இப்பொழுதேயல்லவோ அதை உஜ்ஜீவிக்க முயலவேண்டும். ஆகையால் நீடித்தகாலமாய் காப்பாற்றிய நித்திரையொழித்து, உடனேவிழித்து நன்மதத்தைநாட்டவும் துர்மதங்களையுமோட்டவும் முன்வாருங்கள்" என்று. அப்படியே யாவரும் நடத்தி நன்மையடைவார்களாக.

பண்டிதர்!

உ

ஆர்யதர்மம்.

பிரமோத-ஹூ ஐப்பிசி-மீ உகவ

ஸநாதனமே சாசுவதமானது.

ஸிருஷ்டிகள்தோறும் அனாதியாயுள்ள வேதத்தை பரமேச்வரன் வெளியிடுகிறாரென்று பிரமாணநூல்கள் கூறுகின்றன. அதனால் வேதம் ஒருவராலும் செய்யப்பட்டதில்லை. அனாதியாயுள்ளது. ப்ரம்மதேவரால் பிரார்த்திக்கப்பட்ட ஸ்ரீமந்நாராயண பகவான் வ்யாஸரூபியாயவதரித்து எல்லா பிராணிகளின் இன்பத்தின்பொருட்டு அந்த வேதத்தை அனேக சாகைகளாகப் பிரித்தார். அவற்றுள் ஆசாமலம் நீங்குவதற்கு நிஷ்காமகருமமும், விக்ஷேபநாசத்திற்கு உபாஸனையும், அக்ஞான நிவர்த்திக்கு ஞானமும் முறையே ஸாதனமாகக் கூறப்படுவதால், அவை—கர்மகாண்டம், உபாஸனாகாண்டம், ஞானகாண்டமென்னும் காண்டத்திரயமாகப் பிரிக்கப்படும். இந்த மூன்று காண்டங்களிலும் போதிக்கப்படும் ஸாதனங்களை அனுஷ்டிப்பவர்களே ஸநாதனதர்மிகளாவார்கள். அத்தகைய ஸநாதன தர்மிகளின் ஸநாதனமதம் உலகம் படைக்கப்பட்ட நாள் முதல் இதுகாறும் தோன்றி நிற்பதோடு பின்னிட்டுப் பிரளயகாலம் வரையும் சாசுவதமாகத்தான் நிற்கப்போகிறது என்று பிரமாண நூல்களால் அறியப்படுகின்றது. ஆயினும் பிராணிகளுக்கு இடைஇடையே பிணி வந்து பீடைஎற்படுவதுபோல் இடைஇடையே தோன்றியழியும் பலகுமார்க்கமதநூல்களால் சூழப்பட்டு பனைமரம், மழைகாலத்தில் தன் மேற்படர்ந்தகொடிகளால் சுற்றப்பட்டு தன் சொரூபமே தெரியாமற்போவதுபோல் மூடப்படினும் பனைமரத்திற்படர்ந்தகொடிகள் கோடைகாலத்திற்றானேயுலர்ந்து அம்மரத்தின் மடல்களால் அறுப்புண்டு நசிப்பதுபோல் துர்மதமார்க்கங்களும் தானாக அழிந்து போகவே, ப்ரதிபந்தங்கள் விலகி மீண்டும் அந்த மரமே உள்ளபடி விளங்குவது போல, வேதமார்க்கத்தை ஸ்தாபிக்க எழுந்த அவ

திர புருஷர்கள் அப்போதப்போது குமார்க்க மத நூல்களைக்கண் டித்து விடும்பொழுது தன்னிலைமை குன்றாது விளங்கும். வை திகமான ஸநாதன தர்மம் பிரகாசித்தால் நமது மதம் வேரூன்றித் தழைத்து தேசத்துக்கு மஹத்தாகிய க்ஷேமத்தையுண்டாக்கும். பொதுவாய் இந்துமதக்கிரந்தங்களைப் படிக்கத்தொடங்கினாலேயே ஆத்மார்த்தமானகார்யம் பெரும்பாலும்நடைபெற்றுவரும். மற்ற காரியங்களைவிட ஆத்மார்த்தமான காரியத்தைச் செய்வது மேன்மையன்றோ! அதிலும் வேதாந்தசாஸ்திரங்களைப் படித்துவிட்டால் பொதுநன்மைக்குழைப்பதே பெரிதாகத்தோன்றும். ஏனெனில் வேதாந்திகள் எல்லோரையும் தானாகவே பாவித்து நேசிப்பார்கள். அத்தகைய மஹான்களால் உலகத்துக்குண்டாகும் நன்மை அளவற்றது. எப்படியெனில் அவர்கள் வேடிக்கையாய்ப் பேசுவதிலும், ஈசுவரன் பரலோகம், ஜன்மாந்தரம், வேதம், சாஸ்திரம் இவைகளை நம்பும்படி செய்துவிடுவார்கள். அவைகளில் நம்பிக்கையுள்ளவர்கள் கேவலம் தம் சரீரசுகத்தையே பெரிதாக கருதமாட்டார்கள். அப்படியிருப்பதே ஜகத்துக்குப் பெரியயுபகாரமாம். தன் வயிறு வளர்ப்பதையே பெரிதாக நினைப்பவர்கள் எவ்வளவு பேரிருந்தாலும் அவர்களால் உலகத்துக்கு உபகாரம் கொஞ்சமும் கிடைக்காது. ஆகவே நம் பாரதபூமியிலுள்ள ஆஸ்திக வைதிககனவான்கள் முயற்சித்து உலகநன்மைக்காக உழைப்பார்களானால் நம் தேசம் முன் யுகங்களில் போல உத்கிருஷ்டமான நிலைமையை அடைந்து விளங்கும். ஆகையால் பரமேசுவரனுடைய கிருபையால் நம் நாட்டு ஜனங்களுக்கு வைதிகாசாரத்திலும் வைதிகமத நூல்களிலும், கடைசியாக வேதாந்தசாஸ்திரத்திலும் மேல்மேலும் ஆசையுண்டாகி ஜகத்துக்கே க்ஷேமமுண்டாக ஸர்வேசுவரன் அருள் புரிவாராக. சுபம்!

பத்திராதிபர்.

தஞ்சை நிகழ்ச்சிகள், நவராத்ரி உபன்யாஸங்கள்,

கலி 5062ஸு புரட்டாசி மீ 7௳ (23—9—30) யிலிருந்து மேலவீதி குஜிலியான் மடத்தில் பிரும்மசர்ய ஆச்ரமத்தில் வெங்கடேசப்பெருமாள் கோவில் மடவிளாகத்திலிருக்கும் பிரும்மஸ்ரீ ஸுப்ரமண்ய சாஸ்திரிகளால் அதமபக்ஷம் அனுஷ்டிக்கவேண்டிய வைதிக கர்மங்களைப்பற்றி விரிவாய், தெளிவாய் எல்லோர் மனதிலும் உறுத்தும்படி பல ஸ்மிருதிவசனங்களுடன்உபன்யஸித்தார். விஜயதசமி தினம் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யான ஆனந்தகிரி ஸ்வாமி அவர்களால் ஸம்பாவனை செய்யப்பட்டது. ஷ ஸுப்ரமண்ய சாஸ்திரிகளைக்கொண்டு வாரம் இருமுறை பராசரஸ்மிருதி முழுவதும் ப்ரவசனம் செய்விக்க ஏற்பாடு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

2. மேலவீதி மகா-ள-ள-ஸ்ரீ இந்த்ருபட் வீட்டு வாசல் எலக்ட்ரிக் பந்தலில் சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ அனந்தராம சாஸ்திரிகள் அவர்களால் தேவீமாஹாத்ம்யம் நவராத்திரி முழுவதும் ஸுமார் ஜாமகாலம் ப்ரதிராத்திரியும் நவ (புதிய)ராத்ரியாக்கும்படி ஸ்ரீமத்ராமாயணம், ஸ்ரீமத்பாகவதம், ஸ்ரீமத்மஹாபாரதம் இத்யாதி முக்ய க்ரந்தங்களிலிருந்து பல முக்ய நுட்பவிஷய உபன்யாஸத்துடன் நூற்றுக்கணக்கான தேவிபக்தர்களிடையில் விரிவாய் வாசித்து விவரிக்கப்பட்டது. விஜயதசமியன்று மகாச்ரத்தையுடன் என்றும் இன்றும் சதா உபன்யாஸங்கள் நடத்திவைக்கும் ஷ இந்த்ருபட் அவர்களும் அவர் ப்ராதாக்களும் ஷ அனந்தராமதீக்ஷிதர் அவர்களுக்கும் இடைஇடையே ஆன்னிக விஷயமாய் ப்ரகடனம் செய்ய ஷ தீக்ஷிதரின் பிதா பிரும்மஸ்ரீ ஸுப்ரமண்ய தீக்ஷிதர் அவர்களுக்கும் ஷயாரின் பத்னி குழந்தைகள் முதலான தீக்ஷிதர் குடும்பத்தாருக்குத் தனித்தனியாய் ப்ரத்யேகமாய் விமர்சையாய் எல்லாரும் ஆச்சர்யத்துடன் கொண்டாடும்படி (பண்டிதர்களை ஓர்புறம் ஆதரிக்கவும் ஜனங்களை மறுபுறம் பக்தர்களாக்கவும் தனிகரான இவர் முதன்மையாக வெளிவந்தாரன்றோ என்று சிலாகிக்கும்படி) திருப்தியாக ஸம்மானித்

தார்கள். தொடர்ந்து மறு 9 ராத்திரி ஸ்ரீமத்ராமாயண கட்டங்கள் சொல்லப்பட்டன.

3. இந்த மாதத்தில் முன்பாதியில் பிரும்மஸ்ரீ ஸுப்ரமண்ய தீக்ஷிதரைக்கொண்டு (சேங்காலிபுரம்) கொங்கணேச்வரர் ஸந்நிதியில் வர்ணாச்ரம தர்மத்தைப்பற்றியும், பின்பாதியில் (புரட்டாசிமீ 22உயில்) மைசூர் பிரும்மஸ்ரீ ஸுந்தரராஜாச்சாரைக் கொண்டு ஷை ஸந்நிதியில் மும்மத வேதாந்தஸாரத்தைப்பற்றியும் தஞ்சை ஜில்லா ப்ராம்மணர் ஸநாதனதர்ம ஸம்ரக்ஷண ஸபா ஆதாவில் அதின் கார்யதர்சி ப்ரும்மஸ்ரீ G. V. லக்ஷ்மண சாஸ்திரிகளால் நடத்திவைக்கப்பட்டது. ஷை ஸெக்ரட்ரி, பிராம்மணர்களின் (Cences) ஜனத்தொகை கணக்கிட்டுவருகிறார். மதஉபன்யாஸ வரிசை நடத்த உத்தேசம்.

தம்பதி தர்மம்.

புருஷதர்மத்தையும், ஸ்திரீதர்மத்தையும் தனித்தனிப்பெயராலும் ஆர்யதர்மம், ஸநாதனதர்மம், வர்ணாச்ரமதர்மம், ஸாமான்ய தர்மம் என்ற பலபெயர்களாலும், வகுத்து வகுத்து பலச்ருதி, ஸ்மிருதி, இதிஹாஸ, புராணங்களைத் திரட்டி திரட்டி வாசித்தவர்களுக்கும், வாசியாதவர்களுக்கும், அறிந்தவருக்கும்அறியதாருக்கும் பலமுகமாக பல பண்டிதர்களாலும், பலமுறையும் பகரப் பட்டு வந்திருக்கிறது. பயன் என்ன ? ஆண்கள் பெண்களால் தர்மம் கெட்டுவிட்டது என்றும், பெண்கள் ஆண்களால் கெட்டுவிட்டதென்றும் குற்றம் சாட்டி வருகிறார்கள், சிலர் மட்டும் புருஷர்கள் தம்மால் ஆசாரம் கெட்டது வாஸ்தவமென்றும் ஸ்திரீகளால் தான் கொஞ்சம் மிஞ்சியிருக்கும் குடும்பதர்மம், மதாசாரம், பாக்கி காப்பாற்றப்பட்டுவருகிறது என்றும் கூறிவருகிறார்கள். எதுவரையில் இக்கூற்றுக்களில் வாஸ்தவம் இருக்கிறது என்றது மட்டும் தெரியவில்லை. அறிய முயல்வாரும் இல்லை. லௌகிகர்கள் வைதிகர்களால் கர்மங்கள் கெட்டுவிட்டன என்று பொதுவாகக் குற்றப்பத்திரிகை வாசிப்பதை ஒக்கும். ஒரு வைதிகன் ஸ்நானம் செய்வதில்லை. ஸந்திபண்ணுவதில்லை என்று குற்றம் சாட்டும் லௌகிகன், தன்னைத்தான் அறிந்தானு என்றுதன்னையே

சோதித்துக்கொள்வதில்லை. ஊரார்க்கே (அதுவும் நீசனுக்கே) உழைத்துஉழைத்து மஹரிஷிகள் காலம் ஆதியாய் பாட்டன் தலைமுறைவரையில் பலபல வேற்றுமதமன்னர்கள் கொள்ளைகளுக்கும் படையெடுப்பும் கலகங்களுக்கும் இடையில் வேதம் ஆதியான ஸகல சாஸ்த்ரங்களுடன் காப்பாற்றப்பட்டுவந்த ஆசார, தர்மங்களாகிய பிதுரார்ஜித ஸொத்தை அதின் பயனை புத்திவிசேஷத்தை ஸ்வல்பமூல்ய தனத்திற்கு விற்று அழிப்பவர்களாகிய லௌகிகர்கள் தினம் ஸமாசாரபத்திரிகைகள் (Newspaper) வாசிப்பதை ஆன்னிகமுக்கிய கார்யமாய் அனுஷ்டிப்பதை மேலாகக்கொண்டார்களேயன்றி அரைமணிகாலம் ஸந்தி ஜபத்துக்கு மட்டுமாவது ஒதுக்கிவைக்க புத்திநாடாத இவர்கள் வேதாத்யயனத்தை விடாமல் பின் ஸந்ததிகளுக்கும் ஒப்படைக்க சிரமப்பட்டு காப்பாற்றிவரும் வைதிகர்களை வாய்திறந்து வசைபேச என்ன பாத்யம் இருக்கிறது ? இவ்வாறேபோல் ஆணைப் பெண்ணும், பெண்ணை ஆணும் வசைபேசவேண்டாம். கெட்டது இருவரும் சீர்செய்துகொள்ளவேண்டியது. இருவரும் தான் பிறக்கும் குழந்தைகளின் லக்ஷணமே ஸ்திரீ புருஷர்களாகிய தம்பதிகளின் சீர்கேட்டை குறிக்கவில்லையா ?

2. பல குடும்பங்களிலும் தம்பதிகளுக்குள் ஒற்றுமை குறைவாகவே இருத்தலைப் பார்க்கிறோம். காரணம் விசாரணையில் வெளிவரும். ஆண்தான் பெண்ணைவிட மேலானவன் என்று நினைத்தலும், அதுகாரணங்கொண்டு தன் கோபத்துக்கும்தண்டனைக்கும் பத்நீ வாயை மூடிக்கொண்டு உட்படவேண்டும் என்றும் எண்ணி நிலைமீறி அடக்கியாள ப்ரயத்னப்படுவது ஒரு முதல் காரணம். பாரம்பர்யமான படிமானத்தின் பயனும் சாஸ்திரங்களின் முறையிடும் புண்யபாப நரகமோக்ஷ உரைகளும் ஸ்திரீகளை ஒருவாறு தற்சமயப் பொருமைக்கு உட்படுத்தினாலும், தற்கால நாகரீகமெனும் நரகரோக முறையின் பேதத்தாலும், தம்பதிகளின் க்ரஹஸ்த தர்மானுஷ்டானங்களின் (ஔபாஸனம், வைச்வதேவம், அதிதிபூஜை முதலியன) அழிவாலும், பத்னிகளின் இளம்பருவத்தில் பிறந்த குலவாஸத்தாலும், இங்கிலீஷ் படிப்பால் துராசாரங்கள் படிந்து காமப்பேய் பிடித்த புருஷர்களுடன் ஏற்படும் தனித்த வாழ்க்கையாலும், விதம்விதமான ஆடை, ஆபரணங்களால் பொன்னாலும், பட்டாலும் போர்த்தல்பட்டு ரதிப்ரதிமைக

ளாய் மாறியிருப்பதாலும் ஸ்திரீகள் காரணமில்லாத புருஷன் குணங்களுக்கு ஸஹிக்கமுடியாமல் மனதினால் பல யோஜனைகள் செய்து காலக்ரமத்தில் புருஷன் தன்வசமாக்கி, தானும் தன் புருஷனும் சேர்ந்து கெட்டுவிடுகிறார்கள்.

காமஸூத்திரத்தில்—வாத்ஸ்யாயன ரிஷி—

युवतिश्च जितक्रोधा यथा शास्त्रप्रवर्तिनी ।
करोतिवश्यं भर्तारं सपत्नीश्चाधितिष्ठति ॥

சாஸ்திரப்படி நடந்துகொண்டு கோபத்தைவிட்டு நடந்துகொள்ளும் பத்னி புருஷனை வச்யப்படுத்துகிறாள்.

இவ்விதம் நாவல்களை எறிந்துவிட்டு சாஸ்திரங்களை (தமிழில் எல்லா ஸ்மிருதிகளும் புராணங்களும் எழுதப்பட்டிருக்கின்றன) படித்து அதின்படிதான் நடக்கவேண்டும். அதனால் புருஷனை வசப்படுத்தி, அவனையும் எவ்விதமாகவாவது முயற்சி செய்து சாஸ்திரத்திற்கிசைந்த ஆசாரங்களையும் கர்மங்களையும் அதமபக்ஷம் சுத்தமாய் ஆசரிக்கும்படி தூண்டவேண்டும். அவ்விதம் தூண்டப்பட்ட புருஷன் அனுஷ்டானத்தில் ஆழ்ந்துவிட்டால் பிறகு பத்னியாகிய தன்னையும் தர்மத்தில் நடக்கும்படி ஏவி உதவி புரிவான். இவ்விதம் தம்பதிகள் குடும்பத்தை (க்ரஹஸ்தாச்ரமத்தை) மிக லக்ஷணமாய் நடத்திவரலாம்.

3\. காமஸூத்திரத்தில்—வாத்ஸ்யாயன ரிஷி எழுதுகிறார்—

भर्या रूढविस्रंभा देववत् पतिं आनुकूल्येन वर्तेत ।

ஆழ்ந்த விச்வாஸத்துடன் பதியை ஒற்றுமையுடன் அனுஸரிக்க வேண்டியவள் பத்னி.

सांवत्सरिकं आयं संख्याय तदनुरूपं व्ययं कुर्यात् ।

வருஷவருமானத்தைக் கணக்கிட்டு அதற்குத் தக்கபடி செலவு செய்யவேண்டும்.

ஸ்திரீகள் தர்மசாஸ்திரம் அறிவதோடு கணனசாஸ்திர ஞானமும் பெறவேண்டும். பாஸ்கராசாரியார் பெண் லீலாவதியல்லவா கணிதவகை மூன்றைப்பற்றியும் நன்றாய் விசாரித்து ஞானம் பெற்றவள். 'லீலாவதி' என்ற கணிதக் கவிநூல் (Mathamatics

in the form of Poetry) காதில் கூட விழுந்ததில்லையா ? (ஷை நூலை தமிழில் பெயர்த்து அச்சிட முயற்சி நடக்கிறதாகக் கேழ்வை)

साधिक्षेपवचनमेनं मित्रजनमध्यस्थमेकाकिनं वाऽप्युपालभेत नच मूलकारिका स्यात् ।

தன் புருஷன் தூக்கி எறிந்து கோபித்துப் பேசினால், ஸ்நேகிதர்கள் மத்தியில் இருக்கும்போதாகிலும் தனிமையில் இருக்கும் போதாகிலும், மனைவி கோபித்துக்கொண்டு எடுத்துக்காட்டி திருத்தலாம். மருந்திட்டு கெடுக்கிற வழியில் இறங்கக்கூடாது.

இதிலிருந்து புருஷனும் கோபிக்கக்கூடாது. கோபம் அடக்கப்படவேண்டியதில் ஞானம் பெற்றதாகவும் மேலானவனாகவும் நினைக்கும் ஆணின் முதல்தர்மம் நிற்கிறதல்லவா?

தம்பதிகள் ஒருவர்க்கொருவர் மனம் வேறுபடும் ஸமயங்களில் கர்மத்தை (முன்செய்த வினைப்பயன்) உடனே ஞாபகத்துக்குக் கொண்டுவந்து மனதை ஸமாதானப்படுத்திக்கொண்டு பிந்தி மற்றதோர்ஸமயத்தில் ஒருவருக்கு மற்றவர் உபதேசித்து ஸ்நேஹகத்தை வ்ருத்தி செய்துகொள்ளவேண்டும். இவ்விதம் ஒருவர்க்கொருவர் மாறிமாறி ஞான உபதேசம் செய்துகொண்டு குடும்ப தர்மத்தை லக்ஷணமாக நடத்தவேண்டும். பாபம் என்பதை விளையாட்டாக நினைத்திருப்பதையும் நரகவேதனையை பரிஹாஸமாக பாவிப்பதை விட்டுவிட்டு மெய்வாழ்க்கை வாழவேண்டும். வேதாந்தம் பேசுவதில் ஆசை கொள்கிறோமேயொழிய கர்மம் செய்து செய்து வேதாந்த ஞானத்தை அநுபவத்தில் உபயோகப்படுத்தி குடும்ப தர்மத்தை உண்மையாய் நடத்தி ஈச்வரன் இருப்பை வாஸ்தவமாய் நம்ப முயலவேண்டும். யோஜியுங்கள்! மாயம் வேண்டாம்.

(தொடரும்)

ஸாரம், ரங்காச்சார்யன்.

க்ஞானோபாஸ்திஸ்வரூபம்

(502வது பக்கத்தொடர்ச்சி.)

ஆகவே மோக்ஷத்திற்கு ஆத்மதத்வஞானந்தான் முக்கியகாரணம். ஆத்மதத்துவக்ஞானத்திற்குக் கர்மோபாஸனமிரண்டுங்காரணம். அதிலும், கர்மாபஹிரங்கஸாதனம், உபாஸனம் அந்தரங்கஸாதனமென்றும் சுருதி ஸ்மிருதி நியாயஸித்தமாகிவிட்டதால், இந்த விஷயத்தில் விவாதம் யாதொன்றுமேற்பட நியாயமில்லை. ஆகையால் கர்மகாண்டம், உபாஸனகாண்டம், க்ஞானகாண்டம் என்ற மூன்று காண்டங்களுக்கும் ஸாக்ஷாத்தாகவும் பரம்பரையாகவும் ரமபதத்தில்தான் பரிஸமாப்தி என்று ஒப்புக்கொள்ளவேண்டும். இவ்விஷயத்தை ஸ்ரீகீதாசாரியாளும்

'सर्वे वेदा यत्पदमामनन्ति' என்ற சுலோகத்தால் அர்ஜுனனுக்கு உபதேசித்திருக்கின்றார்கள்.

இம்மூன்று ஸாதனங்களுக்குள் வேதாந்திகளால் மோக்ஷத்திற்கு பரம்பராகாரணமாக நிரூபிக்கப்பட்ட கர்மாக்களின் ஸ்வரூபம் முதலியவற்றை நிர்ணயம்செய்வதற்காகவே, பூர்வமீமாம்ஸாசாஸ்திரம் ஜைமினிபகவானால் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. பாக்கி உபாஸனம் க்ஞானமிவ்விரண்டின் ஸ்வரூபத்தை நிர்ணயிப்பதற்காகத்தான் உத்தரமீமாம்ஸாசாஸ்திரம் வியாஸாசாரியாளால் ஆரம்பிக்கப்பட்டது. உத்தரமீமாம்ஸாசாஸ்திரத்துக்கும், தத்வக்ஞானநிஷ்டையில்தான் முக்கிய தாத்பரியம், உபாஸனநிஷ்டையிலோ முக்கிய தாத்பர்யமில்லை. தத்துவக்ஞானத்திற்கு ஸாதனமாக உபாஸனத்தை உரைப்பதில்தான் தாத்பரியம். இந்த சாஸ்திரத்திற்கு மூலப்பிரமாணமாயுள்ள வேதாந்தங்களுக்குமிவ்வாறே தான் தாத்பரியம் உபாஸனத்தில் சொல்லவேண்டும். இதனால் தான்

सर्वं कर्माखिलं पार्थ ज्ञाने परिसमाप्यते ।
न हि ज्ञानेन सदृशं पवित्रमिह विद्यते ॥

என்று கீதாசாரியாள் தத்வக்ஞானத்தைப் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள்.

இவற்றால் கர்மம் உபாஸனம் க்ஞானமென்ற மூன்று காரணம் மோக்ஷத்திற்கென்று ஸித்தம்.

இவற்றுள் உபாஸனமென்றால் என்ன? க்ஞானமென்றால் என்ன? இவ்விரண்டிற்கும் வித்தியாஸமுண்டா? இல்லையா என்று க்ஞானோபாஸனஸ்வரூபத்தை விசாரிக்கவேண்டியதவசியமாகும். ஏனென்றால் கர்மாவிற்கும் ஞானத்திற்கும் வித்தியாசம் எளிதில் யாவருமறியக்கூடியதாக இருப்பதுபோல் க்ஞானோபாஸனங்களின் ஸ்வரூபம் யாவரும் ஸுலபமாகப் பிறித்தறியக்கூடியதல்ல. உபாஸனமானது தத்துவக்ஞானத்திற்கு அந்தரங்கஸாதனமல்லவா? ஆகவே தத்வக்ஞானமுள்ள காலத்திலும் அது தத்வக்ஞானத்திற்கு ஸஹாயம் புரிந்துகொண்டு பிரகாசியா நிற்கும். கர்மா சித்தசுத்தியை அளிப்பதுடன் க்ஞானத்திற்கு தனது ஸஹாயத்தை நிறுத்திக்கொள்வதால் அதனை பஹிரங்கஸாதனமென்பது, உபாஸனமோ அப்படியல்ல. உபாஸனம்தான் தியானம், பக்தி என்பதாதி சொற்களால் வழங்கப்படுகின்றது. உபாஸனத்திற்கு சித்தம் ஏகாக்கிரமாக இருக்கச்செய்வதுதான் பிரயோஜனம், சித்தத்தினேகாக்ரதையும், சிரவணம், மனனம் முதலிய காலங்களிலும் ஸஹாயமாக இருந்தாலன்றி தத்வக்ஞானமுதயமாக மாட்டாது. ஆதலாலும் அதனை அந்தரங்கஸாதனமென்பது உசிதமேயாகும். ஆகையால்தான் சில ஸமயாசாரியாளுங்கூட இந்த இரண்டிற்கும் வித்தியாஸம் சிறிதுமில்லையென்றும் உபாஸனம்தான் மோக்ஷகாரணமென்றும் அங்கீகரித்துவிட்டார்கள். ஆகவே க்ஞானோபாஸனஸ்வரூபம் விசாரம் செய்யவேண்டியதவசியந்தான். இனி க்ஞானோபாஸனஸ்வரூபவிசாரம் பண்ணத் துடங்குவாம்.

ஆத்ம தத்துவக்ஞானமும் உபாஸனமும் ஒன்றுதானா? அல்லது வெவ்வேறா? என்பதைப்பற்றிசுருதிஸ்மிருதிபிரும்மஸூத்திரம்முதலிய பிரமாணங்களைக்கொண்டு நிர்ணயிக்கத் துடங்குவாம். இவ்விஷயத்தில் சிலரின் அபிப்பிராயமாவது—ஞானமும் உபாஸனமும், ஒன்றேயன்றி வெவ்வேறல்ல—ஏனெனில்; எவ்வஸ்துவை தத்துவக்ஞானத்தாலறிகின்றோமோ, அவ்வஸ்துவையே தானுபாஸிக்க வேண்டுமென்றுஉபாஸனாசாஸ்திரத்தின் தாத்பரியமாகும். ஞானம் எதைக்குறித்துப் பிரவர்த்தித்துளதோ? உபாஸனமும் அதனையே யவலம்பித்துப் பிரவர்த்திப்பதும் யுக்தியுக்தமே. உபாஸனம்

ஞானத்திற்கு அந்தரங்க காரணமல்லவா? ஆகவே இவ்விரண்டு மொருவஸ்துவையேதான் அவலம்பிக்கவேண்டும். அங்ஙனமாயின் ஒரே பரமாத்ம வஸ்துவைக் குறித்து சம்பாதிக்கப்படுகின்ற ஞானத்தியானங்களுக்குப் பேதங்கற்பிப்பது ஸரியல்ல. ஆகையால்த்தான் சில ஸமயசாரியாளும் மோக்ஷகாரணமாக தத்துவக் ஞானத்தை யொப்பாமல் தியானமெனுமுபாஸனமே மோக்ஷகாரணமெனத்தீர்மானித்து விட்டார்கள். ஆகையால் இவ்விரண்டும் பரஸ்பரவித்தியாசமுள்ளதல்லவென்றுதான் நிச்சயிக்கக்கூடியதாயிருக்கிறது—என்று, இது ஸரியல்ல.

1. ஞானத்திற்கும் உபாஸனத்திற்கும் மகாபேதமுண்டு, இவ்விரண்டிற்கும் பேதமில்லை என்றால்? மோக்ஷத்திற்கு கர்மா, உபாஸனமிரண்டு காரணமட்டிலுந்தான் சுருதி சித்தமென ஒப்பும்படி நேரிடும். அவ்வாறே அங்கீகரிக்கும் பட்சத்தில், வேதமானது மூன்று காண்டங்களால் மூன்று காரணங்களை பிரதிபாதிக்கின்றதென்றப் பிரசித்திக்கு விரோதமேற்பட்டுவிடும். வேதத்திற்கு மூன்று காண்டங்களுண்டென்ற விஷயம் மறுக்கக்கூடியதல்லவே. வேதங்களுக்கு இருகாண்டங்களாக விபாகம்செய்வது நூதன சம்பிரதாயமாகுமேயன்றி புராதனமாகமாட்டாது. இம்மூன்று காண்டங்களின் அர்த்தத்தையே கிரமமாக உபதேசிப்பதற்காகவே ஸ்ரீமத் பகவத்கீதா சாஸ்திரமும் மூவாறுபதினெட்டு அத்தியாயங்களாக வகுக்கப்பட்டுளது. ஆகவே, வேதத்திற்கு மூன்று காண்டங்களுண்டு. அவை மூன்றும் கர்மா, உபாஸனம், ஞானமென்ற மூன்று விஷயங்களை யறிவிக்கின்றன. என்றப் பிரசித்தி பலத்தாலேயே ஞானத்தியானங்களிரண்டிற்கும் பரஸ்பரம் அதிகபேதமுண்டென்பதுவியக்தமாய் சித்திக்கின்றது.

2. தவிர, ஞானோபாஸனங்களின் உத்பத்தி காரணத்தை விசாரித்தாலும் பரஸ்பரபேதம் நிச்சயமாக அங்கீகரிக்கும்படி நேரிடும். ஞானமானது சக்ஷுராதிப் பிரமாணங்களுக்கு அதீனமாகவேற்படக்கூடியது. இந்திரியங்களுக்கு குடம் முதலிய பாஹ்ய வஸ்துக்களுடன்ஸம்பந்தமுண்டாமாயின் ஞானம்ஏற்பட்டு விடும், பிரமாணமிருந்தாலும் அந்தகாரத்தில் ஞானோதயமேற்படுவது கண்டதில்லை. ஆதலால் ஸூரியன் தீபம் முதலிய பிரகாசமும், விஷயமும் கண் முதலிய பிரமாணமுமிருக்குமேயானால் ஞானம்

உண்டாகிவிடும். இவைகளைத்தவிர ஞானமுண்டாவதற்கு புருஷப் பிரயத்தினம் முதலிய வேறுகாரணங்கள் தேவையில்லை.

ஞானத்தை புருஷப் பிரயத்தினத்தால் ஸம்பாதித்துவிடமுடியாது. ஒருகாரியத்தை புருஷப் பிரயத்தினத்தால் ஒருவன் ஸம்பாதித்துக்கொள்ளவேண்டுமானால் அப்புருஷப் பிரயத்தினத்திற்கும் காரணமாக ஞானம் அவசியம் வேண்டுமல்லவா? குடம் முதலிய வஸ்துக்களைப் பிரமாணவாயிலாக முதலில் தெரிந்துகொண்ட பிறகு அதனை அடைவதற்காக விருப்பங்கொண்டு பிரயத்தினம் ஏற்படுவது யாவருக்கும் வழக்கம். இதனை "முதலில் உலக வஸ்துக்களில் அறிவு ஏற்படுகின்றது. அதன்பிறகு அதில் விருப்பமுண்டாகிறது. பிறகு அதையடைவதற்குப் பிரயத்தனம் ஏற்படுகின்றதென்று ஸகல சாஸ்திரவாதிகளும் அங்கீகரித்திருக்கிறபடியால் இச்சை, புருஷப் பிரயத்தினமிவை இரண்டிற்கும் மூலகாரணமாகிய ஞானத்திற்குப் புருஷப் பிரயத்தினம் எப்படிக் காரணமாகும்? ஆகையால் ஞானம் புருஷப் பிரயத்தனத்தால் ஸம்பாதிக்கத் தக்கதல்ல. ஆனால் புருஷப்பிரயத்தினத்தால் ஞானப் பிரதிபந்தகங்களை விலக்கிக்கொள்ளலாம். இவ்விஷயம் விரிவாக ஆகரத்தில் கண்டு தெளியலாம்.

இவ்வாறே பிரமாணவாயிலாக உத்பன்னமான தத்துவக்ஞானத்தை புருஷப்பிரயத்தினத்தால் நசிக்கச் செய்யவும் இயலாது. தத்வநிர்ணயவடிவமாயுள்ள ஞானம் எந்த ஞானத்தாலும் பாதிக்கப்படமாட்டாதல்லவா? ஸம்சயம், விபரீதம் இவைகளுக்கு பாதமென்பதுண்டேயன்றி நிச்சயத்துக்கல்ல. ஞானம் பிரமாணபராதீனமாயுள்ளதென்ற வாதத்திற்கு நிச்சயம் தான் பிரமாணாதீனமென்றுதான் அர்த்தம். ஸம்சய விபரீதக்ஞானங்கள் பிரமாணாதீனங்களென்று சொல்வதற்கு சாஸ்திரங்கள் இடந்தரவில்லை. ஸம்சயவிபரீதக்ஞானங்களுக்கு புருஷதோஷமும், விஷயதோஷமும்கூட காரணம். சக்ஷுராதிப் பிரமாணங்களுக்கெல்லாம் நிச்சயக்ஞானத்தையுண்டுபண்ணுவது ஸ்வபாவஸித்தமேயன்றி ஸம்சயாதிகளை ஸம்பாதித்துக்கொடுப்பதல்ல. அவைகளை ஸம்பாதித்துக்கொள்வது புருஷர் தான் என்பது நிச்சயம். இவ்விஷயத்தில் சிலருக்கு அபிப்பிராயபேதமுண்டு. அதாவது— ஸம்சய விபரீதக்ஞானங்களும்கூட பிரமாணாதீனங்கள்தான் எப்படியென்றால்

धर्म्यंशे सर्वमभ्रान्तं प्रकारे तु विपर्ययः

என்ற நியாயப் பிரகாரமாக, ஸம்சயாதிக்ஞானங்களும் ஞாநம்சத்தில் நிச்சயரூபமானதால் அந்த பாகத்தில் மட்டிலும் அவைகளும் பிரமாணாதீனமாகவே இருப்பதாக ஸித்திக்கின்றதல்லவா? எப்படியானாலும் சரி. ஞானமென்பதை எதுவோ அது புருஷப்பிரயத்தினங்களால் நசிக்கமாட்டாதென்பது யாவரும் அங்கீகரிக்கத்தான் வேண்டும். அப்படியே புருஷப் பிரயத்தினத்தால் வேறுவிதமாக மாற்றி விடவும் முடியாது. ஆகையால் குடம் முதலிய பாஹ்யபதார்த்தங்களின் ஞானத்துக்கு கூறினது போலவே பரமாத்மக்ஞானமும் ஸ்வதந்தரமாகவும் 'புருஷப்பிரயத்தின ஸம்பந்தம் சிறிதும் அற்றதென்பதாகவும் தான் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்.

'ஞானமானது பிரமாணபாதந்திரம்' என்பதற்கு ஆதாரமாக வேதாந்தவாக்கியங்களுண்டு. அதாவது—சாந்தோக்யத்திலுள்ள ஸநத்குமாரர் தீவிர முமுக்ஷுவாகிய நாரதமஹரிஷிக்கு அஞ்ஞானந்தகாரமற்ற பரமாத்மஸ்வரூபத்தைக் காண்பித்திருக்கிறார்'' என்ற பாவம் பொருந்திய வசனத்தால் ஞானம் பிரமாணாதீனம் என்ற விஷயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஞானம் பிரமாணாதீனமில்லை என்றால் "காண்பிக்கின்றார்'' என்று வர்த்தமான கால பதப்பிரயோகம் பொருந்தாமல்போகும். அப்படிப்பட்ட பதப்பிரயோகத்தால் ஸநத்குமார மகரிஷியின் உபதேசம் ஏற்பட்டவுடன் நாரதர் புருஷப் பிரயத்தினம் யாதொன்றையும் அபேக்ஷிக்காமலே பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிப்பதாகவும், உபதேச காலத்திலேயே நாரதருக்கு தத்துவக்ஞானம், ஸநத்குமாருக்கிருப்பது போலவே பூர்வமே ஸித்தமாய் இருப்பதாகவும், புலப்படுவதால் ஞானம் பிரமாணாதீனமென்பதைஇவ்வசனம் அறிவிக்கவில்லையா? ஞானத்திற்கும், தியானத்திற்கும் வித்தியாஸமில்லை என்பவர்களுக்கு இவ்வசனம் விருத்தமாகுமென்பது நிச்சயம். எப்படியென்றால்? "காண்பிக்கின்றார்'' என்ற ஸநத்குமாரோபதேசம் பெற்றவுடன் நாரதருக்குப் பகவத்தியானமல்லவா உண்டாவதாக ஞானதியானபேதவாதிகள் சொல்லவேண்டும். அவ்விதமே சொல்வோமானால் ஸநத்குமாரர் பரமாத்மதத்வக்ஞானத்தை நாரதருக்கு உபதேசித்தார். நாரதர் பரமாத்மத்தியானத்தை கிரு

ஹித்துக்கொண்டாரென்பதாக ஏற்பட்டுவிடுமே? ஸநத்குமாரர் பரமாத்மத் தியானத்தைத் தான் நாரதருக்குபதேசித்தாரென்று சொல்வதற்கும் முடியவில்லை. "காண்பிக்கின்றார்" என்ற பதத்திற்கு பரமாத்ம தத்துவக்ஞானத்தை உண்டுபண்ணுகிறார் என்று அர்த்தமேயொழிய தியானத்தை உண்டுபண்ணுகின்றார் என்று அர்த்தமல்லவே. தவிர நாரதருக்கு மௌட்யதோஷமல்லவா ஸித்தித்துவிடும். வேததாத்பர்யார்த்தமும் அகன்று விடுமே. ஆகையால் ஸநத்குமாரர் ஞானத்தைத் தான் உபதேசித்தார். நாரதரும் அவ்வுபதேசத்தை அநுஸரித்து ஞானத்தைத்தானடைந்தார் என்று தான் ஸ்வீகரிக்கவேண்டுமேயன்றி தியானத்தை அல்ல. இதுதான் சுருதிசித்தாந்தமாகும். ஆனதால் ஞானத்தியானபேதவாதிகளுக்கு இந்த சுருதி விருத்தந்தான்.

நிற்க ஞானம் புருஷப் பிரயத்தினஸாத்தியமில்லைஎன்பதற்கு ஆதாரமாக இன்னமும் பல சுருதிவசனங்களுண்டு. அவற்றை விரிவிற்கஞ்சி விஸ்தரிக்காமல் விடுத்தனம். அதனை ஆங்காங்கு ஊஹித்தறியவும்.

உபாஸனமோ ஞானத்தைப்போல் பிரமாணபராதீனமல்ல. புருஷப்பிரயத்தின ஸாத்தியமாகும். தியானமும், உபாஸனமும் ஒன்றுதான். குறிப்பிட்ட ஏதாவதொரே விஷயத்தை தைலதாரைபோல் இடைவிடாமலடிக்கடி நினைத்துக்கொண்டிருப்பதுதான் தியானமென்னுமுபாஸனமாகும். இத்தகைய த்யானத்தை ஸம்பாதித்துக்கொள்வதற்கு புருஷப் பிரயத்தினம் வேண்டும். ஒரே விஷயத்தில் சித்தத்தை நிலை நிறுத்துவதற்காகவும் வேறு வஸ்துவில் நினைவு ஏற்படாமலிருப்பதற்காகவும், தியானம் இடைவிடாமலிருப்பதற்காகவும் புருஷயத்தனமவசியமில்லையா? இத்தகைய அர்த்தவிசேஷத்தில்தான் "உபாஸ்தி" "தியானம்" இது முதலிய சப்தங்களை சுருதி ஸ்மிருதிகளிலும் உலகவியவகாரத்திலும் பிரயோகஞ் செய்திருப்பது. வேதங்களில் கர்மாவைப்போல் உபாஸனத்தையும், புருஷப் பிரவிருத்திமூலமாக ஸம்பாதித்துக்கொள்ளும்படிதான் உபதேசிக்கப்பட்டிருக்கின்றது. "கர்மாவைச் செய்யவேண்டு"மென்பதாக கர்மகாண்ட விதிகள் போதிப்பது போலவே தான் உபாஸனகாண்ட விதிவாக்கியங்களும் "உபாஸனையைச்செய்யக்கடவாயாக" என்று போதிப்பிக்கின்றன. உபாஸ

னையை அநுஷ்டிப்பதற்கும், புருஷர்களுடைய பிரவிருத்தி அவசியம். இதனுலுபாஸனை ஞானத்துக்கு ஸமானஸ்வபாவமுள்ளதல்ல என்பது விளங்குகிறது.

புருஷப் பிரயத்தனத்தால் ஸம்பாதித்துக் கொள்ளக்கூடிய காரியங்களைத்தான், வேதங்களோ, பிரபுக்களோ, அல்லது அசர்களோ, கட்டளையிட முடியுமேயொழிய நித்திய ஸித்தத்தையல்ல. வேதங்கள் "உபாஸனையைச்செய்" என்று கட்டளையிட்டிருப்பதாலேயே புருஷப்பிரவிருதி மூலமாகத்தான் உபாஸன மேற்படவேண்டுமென்பது விளங்கும். "உபாஸனையைச்செய்" என்ற விதியால் "உபாஸனையைச் செய்யப் பிரவிருத்திப்பாயாக" என்ற அர்த்தமல்லவா விதிக்கப்படுகின்றது. "உபாஸனம்செய்ய வேண்டும்" என்ற ஞானமுபாஸனுருப மில்லையே? இந்தக்ஞான மேற்பட்டபிறகு புருஷப் பிரவிருத்தியாலேற்படுகின்ற ஸ்மிருதி தாரையல்லவா உபாஸனமென்பது. இக்காரணத்தாலும் விதியாலறிவிக்கப்படுமுபாஸனமும் விதி விஷயமில்லாத ஞானமுமொன்ருகாதென்றுஸித்தமே. பிரும்மஸூத்திரகாரர்களாகிய ஸ்ரீமத்பாதராயணுசாரியாளும், ஞானத் தியானங்களுக்குக் கீழ்க்கண்டபடி பரஸ்பரபேதத்தை ஸ்பஷ்டமாக அறிவித்திருக்கிருர்கள்.

அதாவது—

" शास्त्रयोनित्वात् " " तत्तुसमन्वयात् "

என்ற ஸூத்திரங்களால் "பிரும்மக்ஞானமனது, மஹாவாக்கியம் முதலிய சப்தப் பிராமணத்தால்த் தானுண்டாகுமேயொழிய விதிவாக்கியத்தால் உண்டாகமாட்டாது. பிரும்மக்ஞானத்தில் விதியென்பது ஸம்பவிக்கமாட்டாதென்பதாக பிரும்மக்ஞானத்தைப் பிரமாணுதீனமாகவும் விதிக்கு விஷயமில்லாததகாவும் சாஸ்திராரம்பத்தில் நன்ருய் நிருபித்துவிட்டு மறுபடியும் மூன்ருவது அத்தியாயத்தில்

सर्ववेदान्तप्रत्ययंचोदनाद्यविशेषात् ।

என்ற ஸூத்திரத்தால் "விதியாலறியப்படுவதுதானுபாஸனை என்பது. விதிக்கு உபாஸனை தான் விஷயம்" என்பதாக உபாஸனையை விதிக்கு விஷயமாக வர்ணனம் பண்ணியதை பராமர்சம் பண்ணினல் ஸ்ரீ பாதராயணுசாரியாளுக்கு ஞானத்தியானமிரண்

டும் வெவ்வேறென்பதில்த்தான் அபிப்பிராயமென்பது நன்கு விளங்கவில்லையா.? ஆதலால், ஞானோபாஸனங்களின் காரணங்களை விமர்சம்செய்து பார்த்தாலும் அவை ஒன்றல்லவென்று ஸித்தம்.

அடுத்த வாரத்தில், ஞானத்தியானங்களின் விஷயங்களைப் பற்றி விஸ்தாரமாக விசாரிக்கத் துடங்குவாம். சுபம்.

வி. ஜகதீசுவரசாஸ்திரிகள்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.